[திரு. ஜி.கே. மணி] [2002 மார்ச் 15

நேர்மையாகவும் நடத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்திலே, மற்ற தேர்தல்களுக்கு ஆணையம் இருப்பதைப்போல கூட்டுறவுத் தேர்தல் நடத்துவதற்கும் கூட்டுறவுக்கு ஒரு ஆணையம் நிறுவ வேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

அதைப்போலவே, பத்தி 11-லே ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது. மத்திய அரசு தமிழகத்திற்கு நிதியினைக் குறைவாக வழங்கியிருக்கிறது என்றும், நிதியைக் குறைத்துவிட்டதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் மத்திய அரசினுடைய வரி வருவாயிலே 29 சதவிகிதம் மாநிலங்களுக்கு வழங்க வேண்டும் என்று மத்திய அரசு சொல்லியிருக்கிறது. அதுமாத்திரமல்ல, மத்திய அரசு அரசியல் திருத்தச் சட்டமும் கொண்டுவந்திருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட சூழ்நிலையிலே மற்ற மாநிலங்கள் எல்லாம் கூடுதலாக நிதி பெறக்கூடிய இந்தச் சூழ்நிலையிலே, நம்முடைய அரசுக்கு மத்திய அரசு கூடுதலாக நிதி தரத் தவறிவிட்டது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதற்காக இம்மாமன்றத்தில் தமிழகத்தினுடைய பொருளாதார நிலையை மனதிலே வைத்து நிதி நெருக்கடியையும் சுட்டிக்காட்டி, கூடுதலாக மத்திய அரசு நிதி வழங்க வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்திலே. மத்திய அரசு வருமான வரிக்கு 5 சதவிகிதம் கூடுதல் வரி, அதாவது சர்-சார்ஜ் வரி விதிக்கிறது. அதை மாநில அரசு வரி வசூலிக்கக்கூடிய அளவிலே, சர்-சார்ஜ் வரியிலே 5 சதவிகிதம் மாநில அரசுகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது, அதையும் நாம் கேட்டுப் பெறவில்லை. அதே நேரத்திலே, மத்திய அரசு பொருளாதாரச் சீர்திருத்தத்தை ஒவ்வொரு மாநிலமும் கொண்டுவர வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. ஆனால் நம்முடைய அரசு மற்ற மாநிலங்களைப் போல் பொருளாதாரத்திலே சீர்திருத்தம் கொண்டுவரவில்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது எந்த வகையில் என்று சொன்னால்—உதாரணத்திற்குக்கூட என்னாலே ஒன்றைச் சொல்ல முடியும்—மின் துறையிலே மராட்டிய மாநிலம் போன்ற பல்வேறு மாநிலங்களிலே எல்லாம், 6, 7 ஆண்டுகளுக்கு முன்பே பொருளாதாரச் சீர்திருத்தத்தைக் கொண்டுவந்து, கையொப்பம் இட்டிருக்கிறது. ஆனால் நம்முடைய அரசு. மின் துறையிலே பொருளாதாரச் சீர்திருத்தத்திலே சமீபத்திலேதான் கையொப்பம் இட்டிருக்கிறது. ஆகவே இப்படி மத்திய அரசோடு இணக்கமான ஒரு சூழ்நிலையை வகுத்து, கூடுதலான நிதியைப்